**O.S.No. 120/2017**

**Date 11.07.2025**

**வா.சா.1 குருசாமி**

**பிரதிவாதிகள் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

பிராது 2ம் தபசில் சொத்தை பொறுத்த அளவில் எந்த கிரைய பத்திரமும் பரிவர்த்தனை மூலம் எங்களுக்கு ஏற்படுத்தியது கிடையாது என்றால் அது எங்கள் சொத்தாகும். மேற்படி சொத்திற்கு ஆவணங்கள் என்னிடம் உள்ளது. வழக்காவணங்கள் அனைத்தும் என்னால் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பிராதில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையல்ல என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் முந்தைய உரிமையாளர்களும் 1ம் பிரதிவாதியும் 2ம் தபசில்சொத்தை எந்தவித வில்லங்க விக்கிரகங்கள் இல்லாமல் அனுபவித்து வந்த நிலையில் அவருக்கு உரிமையான பொது நடைபாதை சொத்தினை அபகரிக்கும் நோக்கோடு இவ்வழக்கை தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சர்வே எண். 996/29 சொத்து அப்ரானந்தம் பிள்ளைக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. 19.04.2007ம் ஆண்டு மேற்படி சர்வே எண்ணை ராமர்பாண்டியன் கிரையம் பெற்றுள்ளார் என்றால் பகுதியை கிரையம் பெற்றுள்ளார். மேற்படி சொத்தின் மீத பகுதியை 1ம் பிரதிவாதியும் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். சர்வே எண். 996/29 சொத்து அப்ரானந்தம் பிள்ளைக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ராமர்பாண்டியன் பெற்ற கிரைய பத்திரத்தில் பொது நடைபாதைக்கு மேற்கு என்று மால் காண்பித்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ராமர்பாண்டி பெற்ற கிரையம் ஆவணம் குறித்து எனக்கு தெரியாது.

**ம.வி இல்லை.**